ශ්‍රී ලංකා නීති ආධාර කොමිෂන් සභාව
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
Legal Aid Commission of Sri Lanka


# பிணைச் சட்டம்




USAID நிறுவனத்தின் CORE Justice நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியினால் உருவாக்கப்பட்டது

USAID
FROM THE AMERICAN PEOPLE

USAID
FROM THE AMERICAN PEOPLE

## பொறுப்புத் துறப்பு

"இவ்வெளியீடு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் (USAID) ஊடாக அமெரிக்க மக்கள் வழங்கிய ஆதரவின் மூலம் சாத்தியமான விடயமாக அமைந்துள்ளது. இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் USAID அமைப்பின் அல்லது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் நோக்குகளை பிரதிபலிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை".

Ministry of Justice

# பிணைச் சட்டம்

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**

பங்களிப்பு வழங்கியவர்
சட்ட அதிகாரி துஷாரி சகுந்தலா கருணாசிங்க, LLB

copyrights@ Legal Aid Commission of Sri Lanka



## தவிசாளரின் செய்தி

சட்ட உதவி ஆணைக்குழு 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். நியதிச் சட்ட அமைப்பான சட்ட உதவி ஆணைக்குழு தகுதிவாய்ந்த சட்டத்தரணிகளின் அணி ஒன்றின் ஊடாக சலுகைகளற்ற சமுதாயத்துக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது. எமது ஆணைக்குழுவினால் மனித உரிமைகள், சிறுவர்களின் உரிமைகள், பெண்களின் உரிமைகள், முதியோர் உரிமைகள், குடும்பச் சட்டம், தொழிலாளர் சட்டம் உள்ளடங்கலாக பல விடயங்களில் சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது. எம்மால் முடிந்தளவு அதிகமான குடியியல் சட்ட விவகாரங்களில் நிவாரணம் எமது உதவிப் பரப்பினை அதிகரிக்கும் நோக்கில் நாம் விழிப்புணர்வூட்டல் மற்றும் வழிகாட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றோம்.

உரிமை மீறல்கள் தொடர்பில் அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் ஈடுபாடுகளைக் கொண்டுள்ள போதும் இலங்கை அரசாங்கத்தின் நியதிச் சட்ட அமைப்பொன்றாக சட்ட உதவி ஆணைக்குழு மாத்திரமே சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரம் மிக்க சட்ட வலு மிக்க அமைப்பாகத் திகழ்கின்றது.

சட்ட உதவி ஆணைக்குழு மக்களின் வருமானம், சமூக நிலை, இனம், தேசியம், மதம், பால்நிலை அல்லது வயது போன்ற விடயங்களைக் கருத்திற்கொள்ளாமல் மக்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் சட்ட உதவிக்கு உரித்தான புறக்கணிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தனி நபர்கள் நீதிக்கான சமமான அணுகலைப் பெற்றுக்கொள்ள உதவியமை தொடர்பில் நாம் பெருமை கொண்டவர்களாக உள்ளோம்.

சமூகங்கள், அதிகாரிகள் மற்றும் தனிநபர்கள் போன்றோர் சட்டத்தைப் புரிந்து கொள்ளவும், தமது உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் அறிந்தவர்களாக இருப்பதற்கும் அத்துடன் சட்ட உதவி ஆணைக்குழுவின் கடப்பாடு கொண்ட சட்டத்தரணிகளின் ஊடாக அவர்கள் உதவிகளைப் பெற முடியும் என்பதை அறிவதற்கும் இக் கைநூல்களின் வரிசை உதவுவதோடு அவை சமூகங்களை மேலும் வலுப்படுத்தும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**றொஹான் சஹபந்து**

- ஜனாதிபதி சட்டத்தரணி

தவிசாளர், சட்ட உதவி ஆணைக்குழு

# இலங்கை
# சட்ட உதவி ஆணைக்குழு

1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் சட்ட உதவி ஆணைக்குழு (LAC) உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு சமூக நிலை, தமது பால்நிலையின் தன்மை, சாதி, வயது அல்லது ஏனைய வரன்முறை காரணமாக நீதிக்கான அணுகல் தடைப்பட்டதாக அல்லது மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படும் பாதிப்புறும் ஏதுநிலை மிக்க மற்றும் தேவைகள் கொண்ட சமூகங்கள் அத்துடன் தனி நபர்களுக்கு சட்ட உதவி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

சட்ட உதவி ஆணைக்குழுவானது அதன் ஸ்திரத்தன்மை மற்றும் பேண்தகு நிலை காரணமாக ஏனைய சட்ட உதவி வழங்கும் நிறுவனங்கள் மத்தியில் முதன்மையான நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

இலங்கையின் 9 மாகாணங்களிலும் தனது 84 நிலையங்கள் ஊடாக நிலைத்து நிற்கும் சட்ட உதவி ஆணைக்குழு அனைவருக்கும் எவ்வித முற்கற்பிதங்களும் இன்றி கல்வி வழங்குதல், விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் சட்ட உதவி வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கி வருகின்றது. இவ்வாணைக்குழுவில் 120 நிரந்தர சட்ட உத்தியோகத்தர்கள் உள்ளதுடன் பிராந்திய நீதிமன்றங்களில் இருந்து பணிபுரியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளின் உதவியுடன் ஆணைக்குழு இயங்கி வருகின்றது.

உரித்துடைய அனைத்து இலங்கையர்களும் நீதிக்கான சம அணுகலைப் பெறக் கூடிய சமூகம் ஒன்றை உருவாக்குவதே ஆணைக்குழுவின் தொலை நோக்காக அமைந்துள்ளது.

இந்நோக்கத்தை எட்டும் இலட்சியத்துடன் சட்ட உதவி ஆணைக்குழு பல கருத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஆணைக்குழுவின் சட்டம் நாட்டிலுள்ள "உரித்துடைய நபர்கள்" அனைவருக்கும் சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உதவி வழங்க வேண்டும் என்று பணித்துள்ளது.

## எமது தொலைநோக்கு


**நீதிக்கான சம அணுகல்**

அனைத்து உரித்துடைய இலங்கையர்களும் அவர்களின் பொருளாதார அல்லது சமூக நிலை, பால்நிலை, சாதி, சமய நம்பிக்கை, அல்லது தேசியம் அல்லது மாற்றுத்திறன் போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்படாமல் நீதிக்கான சம அணுகலைப் பெறும் சமூகம் ஒன்றை உருவாக்குதல்.

# உள்ளடக்கம்

பக்க இல


| | |
|---|---|
| பிணை என்றால் என்ன? | 01 |
| பிணைச் சட்டத்திற்கான விதிவிலக்குகள் | 02 |
| இலங்கையில் பிணை தொடர்பான முக்கியமான நியதிச்சட்டங்கள் | 02 |
| பிணை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது? | 02 |
| பிணை தொடர்பான நிபந்தனைகளும் பிணைமுறியும் (பிரிவுகள் 405, 406) | 03 |
| பிணை வகைகள் | 04 |
| பிணை வழங்கப்படாத நிகழ்வுகள் | 05 |
| எப்போது பிணை மறுக்க முடியும்? | 07 |
| பொது சொத்து பாதுகாப்பு சட்டம் | 11 |
| சிறைச்சாலையின் நிரந்தர கட்டளைகள் | 14 |
| சட்ட உதவி ஆணைக்குழு | 15 |
| LAC நிலையங்களின் பட்டியல் | 16 |



## பிணை என்றால் என்ன?

'பிணை' என்ற சொல் நமது சட்டத்தில் பல்வேறு வழிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நாளில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் முன்தோன்றுவதை உறுதி செய்யும் செயல்முறையாக பிணை வரையறுக்கப்படலாம். விசாரணைக்கு நீதிமன்றத்தில் முன்தோன்றும் பொருட்டு ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட தற்காலிக விடுவிப்பு என்றும் பிணை வரையறுக்கப்படுகிறது.

> “சட்டத்தின்படி, கைது செய்யப்பட்ட அத்தகைய நபரை நீதிமன்றத்தில் முன்தோன்ற வைக்காமல் 24 மணி நேரத்திற்கும் மேலாக ஒருவரை தடுத்து வைக்க முடியாது.”

## பிணைச் சட்டத்திற்கான விதிவிலக்குகள்

- 2005 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்படி, ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவரை அதிகபட்சம் 48 மணி நேரம் தடுத்து வைக்க முடியும் என்று கூறுகிறது.

- 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவரை 72 மணி நேரம் தடுத்து வைக்க முடியும் என்று கூறுகிறது.

## இலங்கையில் பிணை தொடர்பான முக்கியமான நியதிச்சட்டங்கள்

1. 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இலங்கை பிணைச் சட்டம்.

2. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடபடிமுறைக்கோவை.


402வது சட்ட பிரிவு பிணையில் விடக்கூடிய குற்றங்களைக் கூறுகிறது. பிணையில் விடமுடியாக் குற்றத்திற்கு எப்போது பிணை எடுக்க முடியும் என்று 403வது சட்ட பிரிவு கூறுகிறது.

## பிணை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?

404வது சட்ட பிரிவு ஒரு நபருக்கு வழங்கப்படும் பிணையின் அளவு அதிகமாக இருக்கக்கூடாது என்று கூறுகிறது. இந்த பிரிவில் கூறப்பட்டுள்ளபடி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் உள்ள அதிகாரங்கள் பின்வருமாறு;

1. மேல்முறையீட்டு நீதிமன்றமானது கட்டுக்காவலில் உள்ள எந்தவொரு நபரையும் பிணையில் விடுவிக்கலாம் அல்லது மேல் நீதிமன்றம் அல்லது நீதிவான் நிர்ணயித்த பிணையினை குறைக்க அல்லது அதிகரிக்க வேண்டும் என்று உத்தரவிடலாம்.

2. மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவானினால் பிணையில் விரிவுபடுத்தப்பட்ட எந்தவொரு நபரும் கட்டுக்காவலில் வைக்கப்பட வேண்டும்.




## பிணை தொடர்பான நிபந்தனைகளும் பிணைமுறியும் (பிரிவுகள் 405, 406)

பிணையில் விடுவிக்கப்பட்ட நபர் ஒருவர் அழைக்கப்படும் போது நீதிமன்றத்தில் முன்தோன்ற வேண்டும்.

முறியானது நிறைவேற்றப்பட்ட பின் அந்த குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட வேண்டும். அத்தகைய நபர் சிறையில் இருந்தால், நீதிமன்றம் சிறைச்சாலைக்கு பொறுப்பான அதிகாரிக்கு விடுவிப்பதற்கான கட்டளையை பிறப்பிக்க வேண்டும், கட்டளையைப் பெற்ற பின்னர் அத்தகைய அதிகாரி அந்த நபரை பிணையில் விடுவிக்க வேண்டும்.

பிணை முறியினை நிறைவேற்றிய ஒருவர், நீதிமன்றத்தினால் அழைக்கப்படும் போது பிணையில் உள்ள நபர் முன்தோன்றுவதை உறுதி செய்ய வேண்டும். பிணையில் விடுவிக்கப்பட்ட நபரை அத்தகைய தோற்றத்திற்கு நம்ப முடியாவிட்டால், முறியினை நிறைவேற்றிய நபர் அத்தகைய முறியிலிருந்து தன்னை விடுவிக்க நீதிமன்றத்தில் கோரலாம். பிரிவு 408 (2) இன் படி, அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றம் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கும். இது போன்ற நிகழ்வுகளில் தற்போதைய பிணையாளி விடுவிக்கப்பட்டு மற்றும் புதிய பிணையாளி நியமிக்கப்படலாம்.

# பிணை வகைகள்

### பணப் பிணை

குறிப்பிடப்பட்ட பணத்தொகையை ஒரு முறியாக வைத்தவுடன் பிணை வழங்கப்படுகிறது.

### சான்றளிக்கப்பட்ட பிணை

பிணைத்தொகைக்கு சமமான பத்திரத்தை பாதுகாப்பாக வைப்பது.

### சொந்தப் பிணை

குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையாளி ஆக கையெழுத்திடுகிறார். சான்றளிக்கப்பட்ட பிணை அல்லது பணப் பிணை இங்கு ஏற்புடையதாகாது.

### பிணையாளி பிணை

மற்றொரு நபர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணையாளியாக செயற்படுகிறார். இது சில பெறுமதியை எடுக்கும். பிணையில் வழங்கப்பட்ட நிபந்தனைகள் மீறப்பட்டால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிணைத் தொகையை நீதிமன்றத்தில் செலுத்த வேண்டியிருக்கும்.

### காவல்துறை பிணை

ஒரு நபர் பிணையில் விடுவிக்கப்படக்கூடிய குற்றத்தில் கைது செய்யப்பட்டால், காவல்துறைக்கு பொறுப்பான அதிகாரி அல்லது புலனாய்வாளர் சில சமயங்களில் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க முடியும்.

### எதிர்பார்ப்பு/ முன் பிணை

ஒரு நபர் பிணையில் வெளிவராத குற்றத்தைச் செய்திருந்தால் அல்லது அவர் அத்தகைய குற்றத்தைச் செய்ததாக அவர் நம்பும் போது, அவர் காவல் துறையினரால் கைது செய்யப்படுவதற்கு முன்பு நீதிமன்றத்தில் பிணை கோரலாம். (இது 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 21 பிரகாரம் அறிமுகப்படுத்தப்-பட்டுள்ளது) பிணை முறியில் கையெழுத்திடப்பட்ட போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்து பின்வரும் நிபந்தனைகளோடு விடுவிக்கப்படுவார்:

- விசாரணை செய்யும் காவல் நிலையத்திற்கு அறிக்கையிடல்,
- வசிக்கும் இடத்தை விட்டு அல்லது நாட்டை விட்டு வெளியேறக்கூடாது.
- சாட்சிகளைத் தொடர்பு கொள்ள கூடாது.

> “ஒரு நபர் குற்றத்திற்கான தண்டனையாக எப்போதும் சிறையில் அடைக்கப்படுவதில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.”

## பிணை வழங்கப்படாத நிகழ்வுகள்

### பொது சொத்துக்களை அழித்தல்

ரூ. 25,000.00 க்கும் அதிகமான மதிப்புள்ள பொது சொத்துக்கள் சேதமடைந்துள்ள-தாக பிரதி காவல்துறை பரிசோதகர் தரத்திற்கு கீழே அல்லாத உத்தியோகத்தர் அறிக்கை சமர்ப்பித்தால், 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொது சொத்துச் சட்டத்தின்படி வழக்கு விசாரணை முடிவடையும் வரை குற்றஞ்சாட்டப்பட்டவர்களை சிறையில் அடைக்க முடியும்.

### 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்பொருள் சட்டம் (திருத்தம்) கூறுகிறது

ஒரு நபர் தொல்பொருள் சட்டத்தின் வாசகங்களை மீறியிருந்தால், குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்க முடியாது. அவர்கள் நேரடியாக சிறையில் அடைக்கப்படுவார்கள்.

## சில குடியியல் வழக்குகளில்

மாவட்ட நீதிமன்றம் சில பிணக்குகளில் தடைக்கட்டளைள், நிறுத்தற்கட்டளை மற்றும் இடைக்கால தடைக்கட்டளையை வழங்கலாம் மற்றும் அத்தகைய உத்தரவை அமுல்படுத்துவதில் இடையூறு விளைவிப்பவர்கள் நீதிமன்றத்தை அவமதித்ததன் அடிப்படையில் குற்றவாளிகளாகக் கருதப்படலாம். இது போன்ற சந்தர்ப்பங்களில் ஒரு நபர் ஒரு குடியியல் பிடியாணையில் கைது செய்யப்படலாம், மேலும் வழக்கை விசாரிக்கும் வரை அத்தகைய நபரை தடுத்து வைக்க முடியும். அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் முறியினை நிறைவேற்றிய பின்னர் பிணையில் விடுவிக்கப்படலாம் மற்றும் அவர்கள் சான்றுப்படுத்தல் மூலம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்--படுவார்கள்.

பிணைச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு குற்றவியல் நடபடிமுறைக்கோவை செயற்பட்டு வந்தது. இது பிணையில் விடக்கூடிய மற்றும் பிணையில் விடமுடியாத குற்றங்கள் என இரண்டு பிரிவுகளை தெளிவாகக் கூறியுள்ளது.

குற்றவியல் நடபடிமுறைக்கோவை 1993 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது. அதன்படி, பிணை வழங்கப்படக்கூடிய குற்றத்திற்கு பிணை வழங்குவதற்கும், பிணை வழங்காத குற்றங்களுக்கு பிணை மறுப்பதற்கும் நீதிமன்ற விருப்பப்படி அதிகாரம் வழங்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிணை சட்டத்தின் 29 வது பிரிவில் இதேபோன்ற நிலைப்பாடு எட்டப்பட்டுள்ளது.

- **பிரிவு 04** - ஒரு நபர் பிணை எடுக்கக்கூடிய குற்றத்தைச் செய்துள்ளார் அதற்கு பிணை வழங்க முடியும்.
- **பிரிவு 05** - பிணை எடுக்க முடியாத குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு நீதிமன்றத்தின் தற்துணிவின்படி பிணை வழங்கப்படலாம்.
- **பிரிவு 07** - பிணை எடுக்கக்கூடிய அல்லது பிணை எடுக்க இயலாத குற்றம் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு நபருக்கு பிணை வழங்கப்படலாம்.
- **பிரிவு 13** - மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவின் பேரில் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படும் குற்றத்திற்காக சந்தேகிக்கப்படும் நபருக்கு பிணை வழங்க முடியாது.


## எப்போது பிணை மறுக்க முடியும்?

பிரிவு 14 இன் படி, பிணை வழங்குவதற்கான பின்வரும் நிகழ்வுகள் மறுக்கப்படலாம்.

1. அந்த நபர் விசாரணை அல்லது விளக்கத்தில் சமுகமளிக்கமாட்டார் என்று நீதிமன்றத்தின் கருத்து இருந்தால்.
2. பிணையில் இருக்கும் போது குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றொரு குற்றத்தைச் செய்யக்கூடும் என்று நீதிமன்றம் சந்தேகித்தால்.
3. நீதிமன்றம் குறித்த குற்றத்தின் தன்மை மற்றும் பொதுமக்களின் பிரதிபலிப்பு எனக் கருதப்பட்டால், சாட்டப்பட்ட குற்றம் பொதுமக்களின் அமைதியின்மைக்கு வழிவகுக்கும் என நீதிமன்றம் கருதுகின்ற சந்தர்ப்பங்களில்.
4. குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சிகளிலோ அல்லது அவருக்கு எதிரான சாட்சியங்களிலோ தலையிடலாம் அல்லது நீதியின் போக்கைத் தடுக்கலாம் என்று நீதிமன்றம் நினைத்தால்.

> "1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிணைச் சட்டத்தின் 16 வது பிரிவு 12 மாதங்களுக்கும் மேலாக எந்தவொரு நபரையும் தடுத்து வைக்க முடியாது என்று கூறுகிறது"

நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை அனுபவிக்காத ஒருவரை 12 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்க வேண்டுமானால், சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும். இந்த பிரிவின் கீழ் கட்டளையிடப்பட்ட காலம், ஒரு நேரத்தில் மூன்று மாதங்களுக்கும் மொத்தத்தில் பன்னிரண்டு மாதங்களுக்கும் மேற்படாமல் இருக்க வேண்டும்.



### சம்பவக்கற்கை

டபிள்யூ. ஆர் விக்ரமசிங்க எதிர் சட்டமா அதிபர்

குற்றம் சாட்டப்பட்டவர் 2006.09.28 அன்று கொலைக்காக கைது செய்யப்பட்டார். பிணைக்கான விண்ணப்பத்தை 2009.03.30 அன்று நீதிமன்றம் மறுத்துள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர் 3 ஆண்டுகள் மற்றும் 5 மாதங்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். எம். எம். ஜெயவதி எதிர் சட்டமா அதிபரின் முடிவைத் மீளாய்வு செய்ய இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- பிணை சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17 ன் படி ஒரு குற்றவாளியை 24 மாதங்களுக்கு மேல் விளக்கமறியலில் வைக்க முடியாது என்று மனுதாரருக்கான வழக்கறிஞர் வாதிட்டார்.

- எம். எம். ஜெயவதி (C.A189/2004) வழக்கின்படி, குற்றம் சாட்டப்பட்டவர் 24 மாதங்களுக்கு மேல் விளக்கமறியலில் வைக்கலாம் என்பது சட்டமா அதிபர் சார்பாக வாதம். நீதிபதி பஸ்நாயக்க இந்த சந்தர்ப்பத்தில் சட்டத்தின் 16 மற்றும் 17 வது பிரிவுகளை சட்டத்தின் 14 வது பிரிவுடன் படிக்க வேண்டும் என்று கூறினார்.

இந்த வழக்கில் மேல் முறையீட்டு நீதிமன்றம் கூறியது;

ஒரு நபர் விளக்கமறியலில் வைக்கக்கூடிய அதிகபட்ச காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். சட்டத்தின் 17 வது பிரிவின் படி சட்டமா அதிபர் செயல்பட்டிருந்தால் மட்டுமே இரண்டு ஆண்டு காலத்தின் பரிசீலிப்பு. பிரிவு 17 இன் கீழ் எந்தவொரு விண்ணப்பமும் செய்யப்படாவிட்டால், விளக்கமறியலில் வைக்க கூடிய அதிகபட்ச காலம் ஒரு வருடம். அதன்படி இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்ட பிணை வழங்கப்பட வேண்டும்.

### மேன்முறையீட்டின் போது

பிரிவு 20 (2) இன் படி, மேல் நீதிமன்றத்தினால் தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படும் போது, மேல் நீதிமன்றம் மேன்முறையீட்டாளரை பிணையில் விடுவிக்கலாம் பிணையில் விடுவிக்கப்படாத ஒரு மேன்முறையீட்டாளர், மேன்முறையீட்டின் தீர்மானத்தை நிலுவையில் வைத்து சிறை விதிகளின் கீழ் சிறையில் அடைக்கப்படுவார். உயர் நீதிமன்றம் அவரது மேல்முறையீட்டை தீர்மானிப்பதற்காக நிலுவையில் உள்ளது.

பிரிவு 20 (3) கூறுகிறது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால், மரண தண்டனை நிறுத்தப்படும், மேலும் அவர் மேன்முறையீட்டின் தீர்மானத்தை நிலுவையில் வைத்து சிறையில் அடைக்கப்படுவார்.

கொலை (தண்டனைச் சட்டக்கோவை 296), திருட்டு, குற்றவியல் கையாடல், கொள்ளை (தண்டனைச் சட்டக்கோவை 366), கற்பழிப்பு (தண்டனைச் சட்டக்கோவை 363) ஆகியவற்றில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட ஒரு குற்றவாளியால் மேன்முறையீட்டு மீளாய்வு மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்ப முடியும்.

தண்டனைச் சட்டக்கோவை 296 இல் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்கு.

⇩

குற்றப்பகர்வு தாக்கல் செய்யப்படுவதற்கு முன் அல்லது விசாரணை தொடங்குவதற்கு முன் பிணை கோருதல்.

⇩

அத்தகைய மனுவை மேல் நீதிமன்றம் நிராகரித்தால்.

⇩

மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம் (இது மீளாய்விற்கான விண்ணப்பம்).

⇩

அத்தகைய விண்ணப்பத்திற்கு மேல் நீதிமன்றத்தால் பிணை வழங்க மறுக்கும் கட்டளை உள்ளடக்கப்பட வேண்டும்.

அதில் இருக்க வேண்டும்;

- மேல் நீதிமன்றம் சிறப்பு காரணிகளைக் கருத்தில் கொண்டிருக்கவில்லையா
- குற்றஞ்சாட்டப்பட்டவர் நீண்ட காலமாக குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளாரா என்பது
- குற்றச்சாட்டுக்கள் சரியான பரிசோதனையின்றி விதிக்கப்பட்டுள்ளதா
- மேல் நீதிமன்ற கட்டளையில் தவறுள்ளதா

**பிணையினைத் தீர்மானிப்பதற்கான கீழே உள்ள காரணிகளை மேல் முறையீட்டு நீதிமன்றம் பரிசீலிக்கும்**

- முன்னைய குற்றச்சாட்டுக்கள் இல்லாமை
- குற்றத்தின் தன்மை
- குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழுவில் உறுப்பினரா என்பது
- குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சாட்சிகள் மீது செல்வாக்கு செலத்துகின்றாரா இல்லையா என்பதில்

நீதிமன்றம் திருப்தி அடைந்தால் நிபந்தனைகளுடன் அல்லது நிபந்தனை அற்ற பிணை வழங்கப்படுகிறது.

**பிணைச் சட்டம் தொடர்பான முக்கிய கொள்கைப் பிரகடனங்கள்:**

1. 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்துச் சட்டத்திற்கு எதிரான குற்றங்கள்
2. அழிக்கும் ஆயுதங்கள் சட்டம்
3. 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க விஷம், அபின் மற்றும் ஆபத்தான போதை வஸ்துக்கள் சட்டம்
4. இலஞ்ச ஒழிப்புக் கட்டளைச்சட்டம்
5. குடிமக்கள் சட்டம்
6. 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்
7. புலமைச் சட்டம்
8. வனவிலங்கு பாதுகாப்பு சட்டம்
9. விலங்குகள் மீதான கொடுமையைத் தடுக்கும் சட்டம்

# பொது சொத்து பாதுகாப்பு சட்டம்

## 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்துக்களுக்கெதிரான குற்றங்கள் தொடர்பான சட்டம்

பொதுச் சொத்துக்கள் திருட்டு, கொள்ளை, குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம், மோசடி செய்தல், மோசடி ஆவணங்களைத் தயாரித்தல், மோசடி கணக்குகளைத் தயாரித்தல் போன்றவை பொதுச்சொத்துக்களிற்கெதிரான கடுமையான குற்றங்களாகவும், சொத்துக்களை அரசுக்கு பறிமுதல் செய்வதன் மூலம் இழப்புகள் மீட்கப்படுகின்றன என்றும் இந்தச் சட்டம் கூறியுள்ளது.

இது போன்ற நிகழ்வுகளில் பிணை வழங்குவதானது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடபடிமுறைக்கோவையின் படி மேற்கொள்ளப்படுகின்றது. 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்துக்களிற்கெதிரான குற்றங்கள் தொடர்பான சட்டத்தின பிரிவு 03 (2) இன் படி, பிணக்கின் கீழ் உள்ள சொத்தின் மதிப்பு ரூ.25,000.00 க்கு மேல் இருக்கும் சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே விடுவிக்கப்பட முடியுமென பிரிவு 8 (2) கூறுகிறது.

## அழிக்கும் ஆயுதங்கள் சட்டம்

இச்சட்டத்தின்படி அழிவுகரமான ஆயுதங்களை இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் உடைமையில் வைத்திருத்தல், விற்பனை மற்றும் எடுத்துச்செல்லல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு அழிவுகரமான ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் அத்தகைய ஆயுதத்தைப் பயன்படுத்தி அவர் தீங்கு விளைவிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் நியாயமான சந்தேகம் இருக்கும் போது, ஒரு காவல்துறை அதிகாரி நபர் ஒருவரை பிடியாணை இல்லாமல் கைது செய்ய முடியும் என்றும், இந்தச் சட்டத்தின் பிரிவு 07 கூறுகிறது. அத்தகைய நபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து மட்டுமே பிணை கோர முடியும். சட்டமா அதிபர் எதிர் நிலந்தியில், அத்தகைய நபர் உயர் நீதிமன்றங்களில் பிணை கோர முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க (திருத்த) விஷம், அபின் மற்றும் ஆபத்தான போதை வஸ்துக்கள் தொடர்பான சட்டம்

இச்சட்டத்தின்படி 2 கிராம் ஹேரோயின், 2 கிராம் கொகோயின், 3 கிராம் மார்பின், 500 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட ஓபியம் ஆகியவற்றை உடைமையில் வைத்திருந்தல் விற்பனை, ஏற்றுமதி, இறக்குமதி செய்தல் மரண தண்டனை அல்லது வாழ்நாள் சிறைத்தண்டனைக்குரிய குற்றங்களாகும். 54 (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் கீழ் இத்தகைய குற்றங்களுக்கு உடந்தையாக இருத்தலும் தண்டனைக்குரியதாகும். இத்தகைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட நபர்கள் விதிவிலக்கான சூழ்நிலைகளில் அன்றி பிணை வழங்கப்பட முடியாது. பிரிவு 83 (1) படி அத்தகைய நபர்களுக்கு பிணை வழங்க முடியாது என்றும் அவர்கள் மேல் நீதிமன்றத்திலேயே பிணை கோர வேண்டும் என்றும் கூறுகிறது.

## 1948 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டம்

இந்த சட்டம் பல திருத்தங்களுக்கு உட்பட்டது. இலங்கைக்கு சட்டவிரோதமாக குடியகல்வதையும், வெளிநாட்டவர்கள் சட்டவிரோதமாக இலங்கைக்குள் குடியேறுவதையும் தவிர்ப்பதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். சமீபத்திய காலங்களில் பல இலங்கையர்கள் இத்தாலிக்குள் சட்டவிரோதமாக குடியேறியுள்ளனர். அத்தகைய நபர்களைக் கைது செய்வதன் மூலம் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. பிரிவு 45 இன் படி, எந்தவொரு குற்றத்திற்கும் குற்றவாளி என காணப்பட்ட நபர் ஒருவருக்கு பிணை எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பதில் எதுவித ஏற்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை.

## தொல்பொருள் சட்டம்

பிரிவு 15 இச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு பிணை வழங்கப்பட முடியாது என்று கூறுகின்றது. இந்த நிகழ்வில் ஒரு தொல்பொருள் சொத்தின் வரைவிலக்கணத்தைப் புரிந்துகொள்வது முக்கியம், இல்லையெனில் பழைய சொத்தை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் குற்றவாளியாகக் காணப்படலாம். இவ்வாறு பொதுத் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் வழங்கிய சான்றிதழிலில் இருந்தே குறித்த பொருள் ஒரு தொல்பொருள் சொத்தா என அறிய முடியும்.

## இலஞ்ச ஒழிப்புச்சட்டம்

1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 30A இல் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு பிணை வழங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

இலஞ்ச ஒழிப்பு ஆணையாளரால் அதிகாரம் அளிக்கப்பட்ட எந்த அதிகாரியும் இந்தச் இச் சட்டத்தின் கீழான ஒரு குற்றத்திற்காக குற்றவாளி என சந்தேகிக்கப்படும் ஒருவரை கைது செய்ய முடியும். அத்தகைய நபரை தாமதமின்றி ஒரு நீதிவான் முன்பு முன்னிலைப்படுத்த வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், நீதிவான் சட்டத்தின் பிரிவ 30A கீழ் பிணை வழங்கலாம். இருப்பினும் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு சில சூழ்நிலைகளில் மட்டுமே சான்றளிக்கப்பட்ட பிணை வழங்கப்படலாம்.

## மதுவரிக் கட்டளைச்சட்டம்


பிரிவு 39ன் படி, கைது செய்யப்பட்ட நபர்கள் பிணையாளியுடன் அல்லது பிணையாளியின்றி நீதிமன்றங்களுக்கு முன் சமூகமளிக்கும் பிணைமுறியொன்றில் கையெழுத்திட்ட பின் மதுவரி அதிகாரிகளால் பிணை வழங்கப்படலாம்.

## புலமை சொத்துச் சட்டம் 2003 இன் 36 ஆம் இலக்கம்

இந்த சட்டம் குடியியல் மற்றும் குற்றவியல் தவறுகளை குறிப்பிட்டுள்ளது. குடியியல் தவறுகளுக்கு இழப்பீடு வர்த்தக மேல் நீதிமன்றம் மூலம் கோரப்படலாம். குற்றவியல் தவறுகளுக்கு நீதவான் நீதிமன்றத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். பிரிவு 202இன் படி குற்றமிழைக்கப்பட்டு மூன்று வருடத்திற்குள்ளும் அது தெரிய வந்து இரண்டு வருடத்திற்குள்ளும் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## விலங்குகளிற்கு எதிரான கொடுமைகளை தடுக்கும் சட்டம்

ஒரு மிருகத்தை கொடூரமான முறையில் அடிப்பது, கொடூரமான சிகிச்சை, முறையற்ற விதமாக கொண்டுசெல்லல் மற்றும் விலங்குகளுக்கு கொடுமை ஏற்படுத்துதல் ஆகியவை இந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்த ஒருவரை பிடியாணை இல்லாமல் கைது செய்ய முடியும். பிரிவு 13ன் படி, ஒரு அதிகாரி விசாரணை முடியும் வரை விலங்கைத் தடுத்து வைத்துக்கொள்ளும் அதிகாரம் கொண்டவர். விலங்குகளை கொடுமைப்படுத்துவது தொடர்பில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், விலங்குகளை பராமரிப்பதில் ஏற்படும் செலவுகள் குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து பெறப்படலாம்.



# சிறைச்சாலையின் நிரந்தர கட்டளைகள்

சிறைச்சாலை அதிகாரிகள் தங்கள் பணிகளை நடத்துவதற்கான வழிகாட்டுதல் தான் சிறைச்சாலை கட்டளைகள் எனப்படும். இதற்கிணங்க,

- எந்தவொரு குற்றஞ்சாட்டப்பட்ட நபரையும் ஒரு நீதவான் நீதிமன்றம் 14 நாட்களுக்கு மேல் விளக்கமறியலில் வைக்க முடியாது நீதவான் நீதிமன்றங்கள் சிறைச்சாலை தலைமையகத்திற்கு ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவிக்க முடியும். அத்தகைய நீதவான் நீதிமன்றத்தின் மூலம் 14 நாட்களுக்கு மேற்படாமல் ஒரு குற்றவாளியைக் தடுத்துவைத்தல் சட்டபூர்வமானது.

- 07 நாட்களுக்கு குறைவான காலத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நபரை சிறையில் அனுமதிப்பதை தடை செய்கிறது.
பிணை வழங்குவது தொடர்பான நிகழ்வுகளும் இந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன.

- சிறை அதிகாரிகள் அல்லது சிறைக் காவலர்கள் ஒரு வழக்கறிஞரால் அனுப்பப்பட்ட பிணைக்கான எந்தவொரு மனுவையும் ஏற்கக்கூடாது, அவர்கள் நீதிவான் அல்லது நீதிபதிகள் அனுப்பிய மேன்முறையீட்டு மனுக்களில் மட்டுமே கையெழுத்திட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- பிணை கோரும் ஒருவர் பிணை தொகையின் முறியில் செல்ல முடியாது, அத்தகைய நபர்கள் உயர் நீதிமன்றத்தால் நீதிமன்றத் தீர்ப்புகள் சிறைத் துறைக்கு வழங்கப்படும் வரை பாதுகாப்பாக சிறையில் இருக்க வேண்டும்.

- ஒரு நபர் குற்றவாளி என்று நீதவான் நீதிமன்றம் கண்டறிந்த 10 நாட்களுக்குள், அத்தகைய நபர் பிணை கோருவதற்கான தனது விருப்பத்தையும், சிறைக் காவலருக்கு பிணை வழங்குவதற்கான நிபந்தனைகளையும் வெளிப்படுத்த வேண்டும்.

- வழக்கின் பிரதிவாதி சிறையில் இருந்தால் குடியியல் நடபடிமுறைக்கோவை பிரிவு 68ன் படி, சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு கட்டளைச்சேவகர் மூலம் அவருக்கு அழைப்பாணை வழங்கப்பட வேண்டும், இதனால் வழங்கப்பட்ட அழைப்பாணைகள் அந்தந்த நீதிமன்றத்திற்கு சிறைச்சாலை அத்தியட்சகரின் கையொப்பத்துடன் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

- கைதி ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்ட சிறையைத் தவிர வேறு ஒரு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டால், அத்தகைய சிறைத் துறை முன்னைய சிறைச்சாலைத் துறைக்கு ஒரு அறிவிப்பைக் கொடுக்க வேண்டும்.

- பராயமடையாத கைதிகளை அத்தகைய கைதி 22 வயதை எட்டும் வரை மற்ற கைதிகளிடமிருந்து தனியாக வைத்திருக்க வேண்டும். சிறை ஆணையாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

## சட்ட உதவி ஆணைக்குழு

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அரசியலமைப்பு வாரியமாக நிறுவப்பட்டுள்ளது. பல்வேறு வழக்குகளில் இந்த ஆணைக்குழு சட்ட உதவிகளை வழங்குகிறது. இதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு திட்டங்களை நடத்தியுள்ளது. அதில் முதியவர்கள், சிறுவர்கள், பெண்கள் மற்றும் கைதிகளுக்கு சட்ட விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

கைதிகள் ஆணைக்குழுவிற்கு தனிப்பட்ட முறையில் செல்ல முடியாதென்பதால் வழக்கறிஞர் தேவையான விபரங்கள் மற்றும் ஆவணங்களைப் பெற அவர்களிடம் சென்று அவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்குவதற்காக சட்ட உதவி ஆணைக்குழுவால் பெறப்படுவதை உறுதிசெய்கிறார்கள். நாடு முழுவதும் பல சிறைச்சாலைகள் உள்ளன என்றாலும், இப்போது நடைமுறையில் உள்ள ஆணைக்குழுவின் பிராந்திய நிலையங்கள் மூலம் கைதிகளுக்கு பிணை வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை சட்ட உதவி ஆணைக்குழு வகுத்துள்ளது. உங்கள் வசதிக்காக சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளைகளை நாங்கள் குறிப்பிட்டுள்ளோம்.

எந்தவொரு நபரும் அத்தகைய கிளைக்குச் செல்வதன் மூலம் தேவையான சட்ட உதவியைப் பெறலாம்.



# LAC நிலையங்களின் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 011-2433618 | மன்னார் | 023-2222045 |
| அக்கரைப்பற்று | 067-2279462 | மாரவில | 032-2254443 |
| அம்பாறை | 063-2223495 | மாத்தளை | 066-2224828 |
| அநுராதபுரம் | 025-2224465 | மாத்தறை | 041-2233815 |
| அத்தனகல | 033-2297020 | மத்துகம | 034-2249262 |
| அவிசாவளை | 036-2233857 | மாவனெல்ல | 035-2247272 |
| பத்தேகம | 091-2292051 | மினுவாங்கொடை | 011-2297790 |
| பதுளை | 055-2225759 | மொணராகலை | 055-2276891 |
| பலாங்கொடை | 045-2289099 | கல்கிஸ்ஸை | 011-2718708 |
| பலப்பிட்டிய | 091-2255753 | முல்லைத்தீவு | 021-2290077 |
| பண்டாரவளை | 057-2224733 | மூதூர் | 026-2238777 |
| பத்தரமுல்லை | 011-2877687 | நாவலப்பிட்டி | 054-2224227 |
| மட்டக்களப்பு | 065-2225399 | நீர்கொழும்பு | 031-2281080 |
| சாவகச்சேரி | 021-2270882 | நிக்கவெரட்டிய | 037-2260203 |
| சிலாபம் | 032-2222175 | நுகேகொடை | 011-2809068 |
| தம்புள்ளை | 066-2284551 | நுவரெலியா | 052-2235260 |
| தேயந்தர | 041-2268077 | பாணந்துறை | 038-2244822 |
| தெனியாய | 041-2271128 | பருத்தித் துறை | 021-2260212 |
| எம்பிலிப்பிட்டிய | 047-2230299 | பொல்கஹவெல | 037-2243039 |
| கல்கமுவை | 037-2253290 | பொலன்னறுவை | 027-2226572 |
| காலி | 091-2226124 | பொத்துவில் | 063-2248485 |
| கம்பஹா | 033-2248804 | பூகொடை | 011-2405333 |
| ஹம்பாந்தோட்டை | 047-2221092 | இரத்தினபுரி | 045-2226899 |
| ஹட்டன் | 051-2222390 | தங்காலை | 047-2240122 |
| ஹிங்குராகொடை | 027-2245521 | தம்புத்தேகம | 025-2276259 |
| ஹோமாகம | 011-2748813 | திஸ்ஸமஹாராமை | 047-2239611 |
| ஹொரணை | 034-2265244 | திருகோணமலை | 026-2226328 |
| யாழ்ப்பாணம் | 021-2224545 | வாழைச்சேனை | 065-2258349 |
| கடவத்தை | 011-2922440 | வவுனியா | 024-2221863 |
| கடுவெல | 011-2548150 | வலஸ்முல்ல | 047-2245566 |
| கெக்கிராவை | 025-2263536 | வெல்லவாய | 055-2274466 |
| கல்முனை | 067-2223710 | வறக்காப்பொலை | 037-2277075 |
| களுத்துறை | 034-2222017 | வாரியப்பொல | 037-2268199 |
| கண்டி | 081-2388978 | வெலிமடை | 057-2244860 |
| கந்தளாய் | 026-2234521 | மல்லாகம் | 021-2059170 |
| கெபதிகொல்லாவை | 025-2298101 | புத்தளம் | 032-2266636 |
| கேகாலை | 035-2231790 | சியம்பலாண்டுவை | 055-2279250 |
| கிளிநொச்சி | 021-2285618 | தெஹியத்தகண்டி | 027-2250700 |
| குளியாப்பிட்டி | 037-2284611 | LT-பொரளை | 011-2698003 |
| குருநாகல் | 037-2229641 | கலகெதர | 081-2061025 |
| மஹியங்கணை | 055-2258332 | வத்தளை | 011-2935907 |
| மாஹோ | 037-2275075 | ஹெட்டிபொள | 037-2291915 |

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**

இல. 129, உயர் நீதிமன்றத் தொகுதி,
ஹல்ப்ட்ஸ்டார்ப் வீதி, கொழும்பு 12.

011 2433618

legalaidcommission1978@gmail.com

www.legalaid.gov.lk

